# நீதிபதி மார்க்கண்டேய கட்ஜூ இந்திய ப்ரஸ் கவுன்சில் தலைவர் பதவியிலிருந்து ஏன் விலக வேண்டும்?

அருண் ஜேட்லி

ஓய்வு பெற்ற முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதியும் தற்போதைய ப்ரஸ் கவுன்சிலின் தலைவருமான மார்க்கண்டேய கட்ஜூவின் பாரபட்சமான விமர்சனத் தாக்குதலுக்கு கடந்த வாரம் காங்கிரஸ் ஆட்சி செய்யாத இரண்டு மாநிலங்கள் உள்ளாகின. பீகாரில் உள்ள ஊடகங்கள் சுதந்தரமாக செயல்படவில்லை என்று இந்திய ப்ரஸ் கவுன்சில் சார்பாக ஒரு வரைவு அறிக்கையை அவர் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து குஜராத் அரசையும், அதன் முதலமைச்சர் நரேந்திர மோடியையும் தாக்கி த இந்து நாளிதழில் ஒரு கட்டுரையையும் அவர் எழுதினார்.

ஆரம்பத்தில் நீதிபதி கட்ஜூ திறன் வாய்ந்தவராக அறியப்பட்டிருந்தாலும் அவர் எப்போதும் சம்பிரதாயமான நீதிபதியாக இருந்ததேயில்லை. அவர் நீதிபதியாகப் பதவி வகித்த காலத்திலும், அதற்குப் பிறகும் சர்ச்சைக்குரிய கருத்துகளையே கூறிவந்துள்ளார். கௌரவமாகக் கருத்து வெளியிடும் அணுகுமுறை அவருக்கு மிகவும் அந்நியமானது. மேற்கு வங்காளம், பீகார் அல்லது குஜராத் என காங்கிரஸ் அல்லாத எந்த மாநில அரசுகளாக இருந்தாலும் அவர் செய்யும் தாக்குதல்கள், தனது ஓய்வுக்குப் பிறகு கொடுக்கப்பட்ட பணி வாய்ப்புக்கான நன்றி அறிவித்தலாகவே தெரிகிறது.

உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கும், உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கும் ஓய்வுக்குப் பின்னர் எந்த வேலையும் அளிக்கக் கூடாது என்ற கருத்தை நான் தொடர்ந்து வலியுறுத்திவருகிறேன். ஒரு நீதிபதி, ஓய்வுக்குப் பிறகு ஏதாவது பணிகளை எதிர்பார்த்து அதற்கேற்ற வகையில் ஓய்வுக்கு முன்பு செயல்படுவதற்குச் சில உதாரணங்கள் இருக்கின்றன. இருப்பினும் நாம் பல்வேறு தீர்வாணையங்கள் மற்றும் பகுதியளவு நீதி விசாரணைப் பணிகளுக்கு

ஓய்வுபெற்ற நீதிபதிதான் எப்போதும் ப்ரஸ் கவுன்சிலின் தலைவர் பொறுப்புக்கு வருகிறார். ஊடக சுதந்திரம், அந்த சுதந்திரத்தை ஆக்கிரமிக்கும் விவகாரங்கள் மற்றும் ஊடகங்களின் செய்திப்பணி மற்றும் கருத்து கூறுதல் தொடர்பான புகார்களை விசாரிக்கும் பணிகளை அவர் செய்கிறார்.

சட்டப்படி தேவைப்படும் ஒரு பணியை ப்ரஸ் கவுன்சிலின் தலைவர் செய்கிறார். அவரது வேலையில் நேர்மையும், பாகுபாடின்மையும், அரசியல் நடுநிலைமையும் அவசியம். பணியில் இருக்கும் நீதிபதியோ, ஓய்வுபெற்ற நீதிபதியோ யாராக இருந்தாலும் கௌரவமும், அமைதியும், நளினமும் தேவை. ஒரு நீதிபதி உரத்துக் கத்தும் இயல்புள்ளவராக, பக்குவமற்றவராக, அநாகரிகமாக, தான்தோன்றியாக இருக்கமுடியாது. நீதிபதிகள் தங்கள் நீதி தொடர்பான கடமைகளை ஆற்றும் பொழுது அதற்கு வேறு நோக்கங்களை யாரும் கற்பிக்கவே முடியாது. தீர்ப்புகள் மீதான விமர்சனம் கூட கட்டுப்பாடான மொழியில் வெளிப்படுத்தப்பட வேண்டும். விமர்சனம் என்பது கருத்து சார்ந்ததாக இருக்கலாம். தனிப்பட்ட வகையில் இருத்தல் கூடாது. நீதிபதி பணியிலும், பகுதியளவு நீதி நடைமுறை சார்ந்த பணியிலும் இருக்கும் போது அரசியல்ரீதியான சர்ச்சைகளிலிருந்து விலகியிருப்பது என்பது அடிப்படைக் கோட்பாடாகும். அப்படி அவர் அரசியல் செயல்பாட்டில் பங்கேற்கவோ, விவாதத்தில் பங்கேற்கவோ விரும்பினால் அவர் தனது பதவியிலிருந்து விலக வேண்டும். அப்படி இல்லாவிடில் அவரது கருத்துகள் மற்ற அரசியல்வாதிகளுடையது போலவே பரிசோதனைக்கும் விமர்சனத்துக்கும் உரியவையே.

நீதிபதியாகப் பணிபுரியும்போதும் , இப்போதைய பதவியிலும் நீதிபதி மார்க்கண்டேய கட்ஜூ, எல்லாவகையிலும் பொறுப்பிலிருந்து தவறியுள்ளார். தனது அரசியல் தேர்வுகளின் அடிப்படையில் அவர் சில தாக்குதல்களை செய்கிறார். ஓய்வுக்குப் பிறகு அவருக்கு பதவி வழங்கிய தரப்பை அதீத கவனத்துடன் மென்மையாக நடத்துகிறார். செயல்திறனின் அடிப்படையில் இல்லாமல் வாரிசுரிமை அடிப்படையில் தலைமைகள்

உருவாவது பற்றி நான் எழுதியது குறித்து அவரது ஒரு கருத்தைக் கூட நான் அதுவரை படிக்கவில்லை. இந்தியாவை வாரிசுரிமை அடிப்படையிலான ஜனநாயகமாக மாற்ற விரும்புபவர்களுக்கு என் போன்றவர்களின் விமர்சனங்கள் நிச்சயமாக அங்கலாய்ப்பையே ஏற்படுத்தும். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் 2ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு முதல் நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு வரையான விவகாரங்களில் நீதிபதி கட்ஜூவுக்குள் இருக்கும் நியாயப் போராளி விமர்சனம் செய்யாமல் சுயதணிக்கை செய்துவிடுகிறான். ஆனால் பீகாரில் அரசியல் மாற்றம் ஏற்பட்டிருப்பது குறித்தும், மேம்பாட்டை முன்வைத்து அரசியல் உருவாகியிருப்பதையும் உள்நாட்டினரும், சர்வதேச சமூகத்தினரும் பாராட்டும் போது, ஊடக சுதந்திரம் இல்லையென்று நிதீஷ் குமார் மற்றும் பீகார் அரசைக் குறிவைத்து நீதிபதி கட்ஜூ தாக்குகிறார்.

த இந்துவில் அவர் பெயரில் வெளியாகியுள்ள கட்டுரையில் குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி பற்றி எழுதியுள்ளதில் தனிப்பட்ட பகைமையை கட்ஜூ வெளிப்படுத்துகிறார். கோத்ரா சம்பவம் தொடர்பான சபர்மதி எக்ஸ்பிரஸ் ரயில் எரிப்பை எழுதும்போது அவரது அரசியல் காழ்ப்புணர்வு தெளிவாக வெளிப்படுகிறது. அதில், "கோத்ராவில் என்ன நடந்தது என்பது இன்னும் மர்மமே" என்கிறார். பல நபர்களின் மரணங்களுக்கும், படுகாயங்களுக்கும் பொறுப்பான குற்றவாளிகளுக்கு ஆதரவாக நீதிபதி மார்க்கண்டேய கட்ஜூ பேச முயல்கிறாரா? உச்சநீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியும், தற்போது அரசுப்பதவியை வகிக்கும் ஒருவரும் விசாரணை நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட குற்றவாளிகளை, அவர்களது மேல்முறையீடு நிலுவையில் இருப்பதை மறக்கலாமா?

எந்த நீதி அமைப்பாலும் நரேந்திர மோடி முதல்நிலை சாட்சியாக விசாரிக்கப்படாதது குறித்தும் அவர் தனது கருத்துகளை வெளிப்படுத்திச் செல்கிறார். நீதிமன்றத் தீர்ப்புகளை விட அவர் கிசுகிசு மொழியையே

கலவரச் சம்பவங்களில் எந்த தொடர்பும் திரு.மோடிக்கு இல்லை என்ற வாதத்தை நான் ஏற்கவில்லை" என்கிறார்.

குஜராத்தில் பொருளாதார வளர்ச்சியைத் தாழ்ச்சியாகப் பேசுவதன் மூலம் மோடி மீதான தாக்குதல்களைத் தொடர்கிறார். அது குறித்து எழுதும்போது, "மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாமல் பெரும் தொழில் நிறுவனங்களுக்கு சலுகை அளிப்பதையோ, மலிவாக நிலம் மற்றும் மின்சாரம் கொடுப்பதையோ மேம்பாடு என்று சொல்லவே முடியாது." என்கிறார். அவரது இந்த விமர்சனத்துக்குப் சில புள்ளியியல் விவரங்களையும் ஆதாரமாகத் தருகிறார். இந்தியா சுதந்திரம் அடைந்தபோது சமூக மேம்பாட்டுக் குறியீடுகள் தாழ்வாக இருந்த நிலையையும் தற்போது அந்நிலை வியக்கும் அளவுக்கு மாறியிருப்பதையும் பேராசிரியர் ஜகதீஷ் பக்வதி மற்றும் டாக்டர் அரவிந்த் பானகரியா ஆகியோர் சுட்டிக்காட்டியுள்ளனர். 1951 இல் 22 சதவீதமாக இருந்த கல்வியறிவு 2001 இல் 69 ஆக மாறியதையும், 2011 இல் 79 சதவீதமாக உயர்ந்திருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றனர். குழந்தைகளின் இறப்புவிகிதம் 1971 இல் 1000க்கு 144 ஆக இருந்தது. 2001 இல் 60 ஆகவும், 2011 இல் 41 ஆகவும் குறைந்துள்ளது. இப்படியான பின்னணியில் காமாலைக் கண்ணுடன் மார்க்கண்டேய கட்ஜூ குஜராத்தை விமர்சிக்கிறார்.

நீதிபதி கட்ஜூ தனது கட்டுரையை ஒரு அரசியல் முறையீட்டோடு முடிக்கிறார். "தேசத்தின் எதிர்காலத்தைப் பற்றி உண்மையிலேயே கவலையுள்ள இந்திய மக்களுக்கு இந்த முறையீட்டை வைக்கிறேன். இல்லையெனில் 1933இல் ஜெர்மானியர்கள் செய்த அதே தவறை செய்தவர் ஆவார்கள்" என்கிறார். நீதிபதி கட்ஜூ தனது அரசியல் பார்வைகளை வைப்பதற்கான உரிமையை முழுவதும் நான் அங்கீகரிக்கிறேன். ஆனால் ஒரு அரசு அமைப்பில் பதவி வகிக்கும் நபர் அரசியல் செயல்பாட்டில் ஈடுபட முடியுமா என்பதே எனது சந்தேகம். அவரது மேற்சொன்ன முறையீடு என்பது அரசியல் ரீதியானது. காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்களை விட அதீதமான காங்கிரஸ் சார்புள்ளவராக அவர் தோன்றுகிறார்.

உச்சநீதிமன்றத்தின் நீதிபதியாகப் பதவியிலிருப்பவர் நேரடியாக அரசியலில் பங்கேற்று ஒரு முறையீட்டையும் விடுத்தால் குற்றப் பழியை அவர் சந்திக்க வேண்டியிருக்கும். ஒரு ஆட்சிப்பணியாளர் இதே காரியத்தில் ஈடுபட்டால் அவர் தனது பணியிலிருந்து நீக்கம் செய்யப்படுவார். முன்பு நீதிபதியாகப் பணியாற்றியவரும் தற்போது பகுதியளவு நீதிப்பணியைச் செய்ய வேண்டிய அமைப்பான ப்ரஸ் கவுன்சில் அமைப்பின் தலைவருமான மார்க்கண்டேய கட்ஜூ அரசியலில் ஈடுபடுவதற்கு தனது பதவியிலிருந்து விலக வேண்டும். அல்லது பதவியிலிருந்து விலக்கப்பட வேண்டும். ஓய்வுக்குப் பிறகு டெல்லியில் உள்ள லுட்யன்ஸ் பங்களாவில் அமர விரும்பும் ஓய்வுபெற்ற நீதிபதிகள் அரசியல் ரீதியாக நடுநிலையை வகிக்க வேண்டுமே தவிர அரசியல் பங்கேற்பில் ஈடுபடக் கூடாது.